10th March 1959]

THE HON. SRI V. RAMAIAH : My main answer is that this will help our State. It is only a question of surplus power wherever available being made available to other States. So, there is no question of its adversely affecting this State.

SRI S. LAZAR : இணைத்ததற்குப் பிறகு விநியோகிக்கும் முறையில் மாகாணங்களுக்கு எந்த அடிப்படையில் என்ன விகிதத்தில் அது விநியோகிக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : May I know who represents the Madras State in the Special Committee?

THE HON. SRI V. RAMAIAH : The Chief Engineer is a member.

Manufacture of dolls

*668 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ம் வருஷத்திலே துணி பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே இத்தொழில்கள் நடைபெற்று வருகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 10,900.

(*b*) Palayamkottai, Tirunelveli district.

*669 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மரப் பொம்மைகள் தயாரிப்பதற்கான பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இத்தொழிலிலே ஈடுபடுவதற்காக என்னென்ன உதவிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : After their training in the Departmental Training Centre, the trainees are organized into industrial co-operative societies so that they may continue the industry and take up production on a large scale on commercial basis.

SRI P. G. MANICKAM : இவ்வித சாமான்கள் வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு, இங்கே நல்ல விற்பனையாகி வருகிறது. அதே மாதிரி நாம் செய்யக் கூடிய சாமான்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து அங்குள்ள கண்காட்சிகளில் வைப்பதற்கு நமது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு அதிகப்படியான பொம்மைகளை உற்பத்தி செய்ய முற்பட்டால் அதற்குப் பிறகு அவைகளை வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு கவனம் செலுத்தப்படும். அதன் பிறகு அதைப் பற்றி பிரசாரம் செய்வதற்குக் கவனம் செலுத்தப்படும்.

SRI S. M. ANNAMALAI : பொம்மைகளெல்லாம் செய்த பிறகு அந்தப் பொம்மைகளுக்கு கல்யாணம் செய்து வைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is out of order.

[10th March 1959

Sri V. SUBBIAH : கிராமப் பகுதிகளில் மண் பாத்திரங்கள், மண் பொம்மைகள் செய்வதற்கு நல்ல பயிற்சி பெறாமல் இருக்கிறார்கள். அதனால் மண் பொம்மைகளைச் செய்யக்கூடியதும் அவைகளைச் செய்வதற்குப் பயிற்சி அளிக்கக் கூடியதுமான ஏதாவது ஒரு ஸ்தாபனத்தை அமைக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM ; அதைப்பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

Backward class concessions

* 670 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to Short Notice Question No. 7, answered on 18th September 1958—

(*a*) the decision of the Government on the question of giving backward class concessions on the ground of economic considerations alone;

(*b*) whether social conditions have also been considered; and

(*c*) if so, how the social conditions of a community have been decided?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) *to* (*c*) The matter is still under consideration.

Sri K. SATTANATHA KARAYALAR : இது விஷயத்தில் சர்க்கார் இங்கே குறிப்பிட்ட கருத்துக்கு ஸ்டேட் பாக்வேர்ட் க்ளாஸ் அட்வைசரி கமிட்டி மாறான கருத்து தெரிவித்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதைப் பற்றிய தகவல் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

Food poisoning

* 671 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government of India had sent any communication to this Government in regard to findings and general recommendations of the Commission, which enquired into recent food poisoning cases in Madras and Kerala States; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) They have communicated the recommendations of the Commission to the State Governments to enable them to initiate necessary action on such of the recommendations as concern them and to take preliminary steps so that when final decisions are taken by the Government of India they could be implemented immediately.